[1971 டிசம்பர் 6

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி சில கருத்துக்கள் வருகின்றன என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற செயல்களில் நக்சலைட்கள் ஈடுபடும்போது பெரும்பாலோர் அதற்கு இரையாகாமல் இருக்கலாம். அந்த முறையில் அந்தந்தக் கல்லூரி அதற்கான தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மற்ற மாணவர்களெல்லாம் விழிப்புணர்ச்சியோடு இருந்தால் மிகச் சரியாக இருக்கும். மாணவர்களில் பலபேர் தனித்தனியாகப் பார்க்கும்போது சரியாகத்தான் இருக்கிறார்கள். ஒன்றுகூடுகிறபோது சில சூழ்நிலைகளில் அவர்களை வேறு வேலைக்குத் திருப்பி விடுகிற அந்த நிலை ஏற்படாத அளவுக்கு கல்லூரி முதல்வர், பேராசிரியப் பெருமக்கள், மாணவர்கள் ஆகியோர் அடங்கிய குழு அமைந்து, பிரச்சினைகளை முதலில் ஆராய்ந்து தீர்க்க முயன்று, தீர்க்கப்படாத சூழ்நிலை ஏற்படும்போது, மேலிடத்தினர் தலையிட்டு அதற்கான பரிகாரம் காணலாம் என்று யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. பல கல்லூரிகள் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

* 98 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் அரசினருக்கு சொந்தமான ராஜா கல்லூரியில் 9—7—71, 10—7—71 தேதிகளில் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலுள்ள இராஜாக் கல்லூரியிலும் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. பொதுவாக, கல்லூரி மாணவர்கள் எல்லாம் பரீட்சையை ரத்து செய்ய வேண்டும் என்பதற்காக வேலை நிறுத்தம் செய்வதாக அறியப்படுகிறது. உண்மையிலேயே பரீட்சையை ரத்து செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டையைப் பொறுத்தவரையிலும் வேலை நிறுத்தம் ஏற்படவில்லை. ஆனால், குறிப்பிட்ட நாட்களில் இந்த ஆண்டு எடுத்த சில முயற்சிகளின் காரணமாக மாணவர்களிடத்தில் சில வேறுபாடுகள் இருந்தன. ஏனென்றால், புதுக்கோட்டை கல்லூரியில் இப்பொழுது ஆங்கிலப் பிரிவுகள் புதிதாகத் துவங்கப்பட்டிருக்கின்றன. இட வசதி இல்லாததால் வகுப்புகளின் நேரத்தை ஓரளவு மாற்றியமைக்க வேண்டிய அவசியம் இருந்து, காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 1½ மணி வரையிலும் சில பிரிவினரும், காலை

1971 டிசம்பர் 6]

10.45-லிருந்து மாலை 4.30 மணி வரையிலும் மற்ற சில பிரிவினரும் வகுப்புக்கு வரவேண்டும் என்று ஏற்பாடு செய்யப் பட்டது. காலை 10.45 மணியிலிருந்து பிற்பகல் 4.30 வரை வகுப்புக்கு வருகிற பிரிவினரைச் சார்ந்த மாணவர்கள் தங்களுக்கு காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணி வரையிலும் வைக்க வேண்டும் என்று கேட்டார்கள். பிறகு முதல்வர் மாணவர்களை அழைத்து மாற்றம் ஏற்பட்டதற்கான காரண காரிய விளக்கங்களை எடுத்து விளக்கியதற்குப் பிறகு மாணவர்கள் சமாதானம் பெற்று சென்றார்கள். ஆனால், வேலை நிறுத்தம் ஒன்றும் ஏற்படவில்லை. வேலை நிறுத்தம் செய்ததாகச் செய்தி வெளிவந்தது. ஒரு குறிப்பிட்ட பத்திரிகையில் 12—7—71-ல் செய்தி வெளிவந்தது. முதல்வர் விளக்கம் தந்ததற்குப் பிறகு, வேலை நிறுத்தம் ஏற்பட வில்லை என்ற விளக்கத்தையும் 14—7—71 அன்று அதே பத்திரிகையில் வெளியிட்டார்கள். ஆக, வேலை நிறுத்தம் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

வேலை நிறுத்தங்கள் பல்வேறு காரணங்களால் ஏற்பட்டு விடுகின்றன. அவற்றிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய, பரீட்சை எழுத வேண்டாத சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும் என்பதும் ஒரு காரணமாக அமைகிறது. ஆகவே, பரீட்சை வேண்டாம் என்ற நிலைமைகள் இன்னும் வரவில்லை. ஆண்டுக்கு மூன்று பரீட்சைகள் நடக்கின்றன. காலாண்டுப் பரீட்சை, அரை யாண்டுப் பரீட்சை, முழு ஆண்டுப் பரீட்சை என்று வருகின்றன. முழு ஆண்டுப் பரீட்சை பொதுப் பரீட்சையாக அமைகிறது. ஆண்டுப் பரீட்சை வேண்டாம் என்று சிலர் கேட்கிறார்கள். ஆனால், திட்டவட்டமாக பரீட்சை வேண்டாம் என்று சொல் லும் சூழ்நிலை ஏற்படவில்லை. இதற்கான மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற முறையில்தான் இந்திய அரசு இதற்கென்று ஒரு குழு அமைத்து, கல்லூரி அளவிலும், பள்ளி அளவிலும் மாணவர் களைத் தேர்ச்சி பெற வைக்க என்ன முறையைக் கையாளலாம் என்று குழு அமைத்து ஆலோசனைகளைக் கேட்டிருக்கிறார்கள். அவைகளெல்லாம் பரிசிலனையில் இருந்து வருகின்றன. அந்த ஆலோசனைகளின்படி புதிய முறை பரிசீலிக்கப்பட்ட பிறகு மாற் றங்கள் ஏற்படலாம். இப்பொழுது பரீட்சை அறவே வேண்டாம் என்று சொல்லும் சூழ்நிலை ஏற்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே வேலைநிறுத்தம் நடைபெறுகின்ற காலங்களில், அந்த வேலைநிறுத்தத்தைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுப்பதற்காக அரசாங்கத்தின் சார்பிலும், பல்கலைக் கழகத்தின் சார்பிலும் சில உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, ஒரு குழுவை அமைத்து, அப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

[1971 டிசம்பர் 6

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உள்ளபடியே கூற வேண்டுமானால் அது வேலைநிறுத்தம் என்று சொல்வதற்கில்லை. 'படிப்பு நிறுத்தம்' என்றுதான் பொருள்படும். ஒருவேளை ஆசிரியர்கள் பள்ளிகளுக்கோ, கல்லூரிகளுக்கோ போகாமல் இருந்தால் அதுதான் வேலைநிறுத்தம் என்பதாகப் பொருள். மாணவர்கள் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் போகாமல் இருப்பது வேலைநிறுத்தம் அல்ல, படிப்பு நிறுத்தம் எனப்படும். ஒவ்வொரு கல்லூரியிலும், கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்கள், மாணவர் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியவர் களைக் கொண்ட குழுவானது இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஆராய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. எல்லாவிடங்களிலும் இந்தப் பிரச்சினைகளில் அரசாங்க அதிகாரிகள் தலையிட்டால் அதுவே மாச்சரியத்திற்கு இடம் ஏற்படுகிறது. சில இடங்களில் அதிகாரிகள் தலையிட்டு சமாதானம் செய்து வைக்கிறார்கள். திட்டவட்டமான ஒரு முறையை ஏற்படுத்தி, அதைத்தான் எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று சொல்ல முடியாது. பிரச்சினையானது கட்டுக்கு மீறுகிற நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர், அங்குள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பாடுபட்டு சமாதானம் செய்யும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். திட்டவட்டமாக இந்த முறையைத்தான் வகுக்க வேண்டுமென்று அரசாங்க சார்புடைய குழுக்கள் அமைப்பது பொருத்தமாக இருக்காது. பிரச்சினைகளை ஆராய்ந்து கல்வித் துறையினருக்கும், அரசாங்கத்திற்கும், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மாணவர் பிரதிநிதிகள் கொண்ட குழு நல்ல ஆலோசனைகள் கூறினால், அது பற்றி கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாக எடுத்துச்சொல்லப் பட வழி செய்யப்பட்டிருக்கிறது.

Stipend to students of Technical Institutions.

* 99 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have any proposal to increase the stipend given to the student (Low Income Group) of Technical Institutions; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியின் இறுதிநிலையில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் ஓர் ஆண்டு, இரண்டு ஆண்டுகள் என்று பயிற்சி பெறுகிறார்கள். ப்ரீ டெக்னிகல் கோர்ஸ் படிக்கும் மாணவர்களுக்குச் சம்பளம் இல்லையென்று சொல்லப்படுகிறது. ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. தொழிற் பயிற்சி படிக்கும்